கோயம்பேடு மெட்ரோ பணிமனை மேற்கூரையில்

# சூரியஒளி தகடு பொருத்தி மின்உற்பத்தி

## ஆண்டுக்கு 5 லட்சம் யூனிட் மின்சாரம் கிடைக்கும்

சென்னை, செப்.7–

சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் பசுமை ஆற்றலை மைய கருத்தாக கொண்டு மெட்ரோ ரெயில் பணிமனை, ரெயில் நிலையங்களின் மேற்கூரைகள், கார் நிறுத்தும் இடங்கள் போன்றவற்றில் சூரியஒளி (சோலார்) தகடு பொருத்தி மின்சாரத்தை பெறும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

அந்தவகையில் ஏற்கனவே சென்னை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரெயில் பணிமனையில் உள்ள கார் நிறுத்தும் இடத்தின் மேற்கூரையில் சூரிய ஒளிதகடு பொருத்தி, 125 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போது பணிமனை அலுவலகத்தின் மேற்கூரையில் 350 கிலோ வாட் சூரியஒளி தகடு பொருத்தப்பட்டு இருக்கிறது.

இதன் மூலம் மாதத்துக்கு 45 ஆயிரம் யூனிட் மின்சாரமும், ஆண்டுக்கு 5 லட்சத்துக்கும் மேலான யூனிட் மின்சார உற்பத்தி கிடைக்க வாய்ப்பு இருப்பதாகவும், தற்போது பொருத்தப்பட்டுள்ள சூரியஒளி தகடு மூலம் கிடைக்கும் மின்சார உற்பத்தியால் ரூ.19 லட்சத்து 50 ஆயிரம் வரை சேமிக்க முடியும் என்றும், இந்த ஆண்டு இறுதிக்குள் 6 மெகா வாட் திறன் கொண்ட சூரியஒளி தகடுகள் பொருத்தப்பட இருப்பதாகவும் மெட்ரோ ரெயில் நிர்வாகிகள் தெரிவித்தனர்.